நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு (26.08.2025) நேற்று முன்தினம் திருச்சிராப்பள்ளி, அண்ணா விளையாட்டரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படும் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்து, விளையாட்டு வீரர்களிடம் கலந்துரையாடினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி சேஷத்ரிமயும் தீபி சானு, மாவட்ட நகர் ஊரமைப்புக்குழு உறுப்பினர் க.வைரமணி, மாவட்ட விளையாட்டு அலுவலர் நிருமதி.ஞான சுகந்தி, மண்டல முதுநிலை மேலாளர் செந்தில்குமார், விளையாட்டு விடுதியின் மேலாளர் கண்ணன், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின், பஞ்சாப் முதல்வர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் சென்னையில் காலை உணவு திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதியில் அரசு உதவி பெறும் பள்ளியில் காலை உணவு திட்ட விரிவாக்கத்தம் சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். இதில் பேரூராட்சி தலைவர் சசிகுமார் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் பாரிவள்ளல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியை இளவரசி அனைவரையும் வரவேற்றார். இப்பள்ளியில் பிரத்யோகமாக ஏற்பாடு செய்யப்பட்டு எல்இடி திரையில் மாணவமாணவிகள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் பார்த்து மகிழ்ந்தனர்.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ்

சி.எம்.டி.ஏ. சார்பில் சென்னை, தீவுத்திடல் கண்காட்சி மையம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஆக. 28-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டு தலின்படி நேற்று (26.8.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் சென்னை, தீவுத்திடலில், கட்டப்பட்டு வரும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கண்காட்சி மையம், கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம், சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை சாலையில் கட்டப்பட்டு வரும் 776 அடுக்குமாடி குடியிருப்புகள், துறைமுகம் தொகுதி, வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவில் புதிதாக கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், 700+144 அடுக்குமாடி குடியிருப்புகள், சமுதாய நலக்கூடம் மற்றும் விளையாட்டு திடல் என "ஒருங்கிணைந்த வளாகம்", திரு.வி.க. நகர் தொகுதி, பெரம்பூர், சந்திர யோகி சமாதி சாலையில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடம் மற்றும் புரசைவாக்கம், கான்ரான் ஸ்மித் சாலையில் கட்டப்பட்டு வரும் சலவைக்கூடம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் குறித்து இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.

இந்து சமய அறநிலைத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய தொகுதி வாக்குறுதிகள் வண்ண மீன்கள் வியாபார பெருமக்கள் பெருமளவில் பொருளாதாரத்தை ஈட்டுகின்ற ஒரு துறையாக இந்த துறை செயல்படுவதால் சாலையோரங்களில் பல வண்ண மீன் விற்பனை நிலையங்கள் அமைந்திருப்பதை கண்டு அவர்களுடைய கோரிக்கையாக வண்ண மீன்கள் விற்பனைக்கு என்று தனியாக ஒரு வளாகம் உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தார்கள்.

முதல்வர் அவர்கள் தேர்தலின் போது நிச்சயமாக நான் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்த வண்ண மீன்களுக்கு என்று தனியாக விற்பனை மையத்தை ஏற்படுத்தி தருவேன் என்று கூறி, வெற்றி பெற்ற பிறகு அந்த வண்ண மீன் உற்பத்தியாளர்களை நேரடியாக அழைத்து அவர்களோடு கலந்து ஆலோசித்து அவர்களுடைய தேவையை அறிந்து அவர்களுடைய கனவுகளை நிறைவேற்று கின்ற வகையில் இன்று (26.8.2025) 184 கடைகள் பல்வேறு அளவு கொண்ட கடைகளை கட்டி இருக்கின்றோம்.

பிரத்தியேகமாக ஒரு உணவுக் கூடம் அதேபோல் இரண்டு இடங்களில் பவுண்டைன்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், பார்க்கிங் வசதி ஒரே நேரத்தில் 200 கார்கள் நிறுத்துகின்ற அளவிற்கு பார்க்கிங் வசதி, இரண்டு சக்கர வாகனங்கள் 400க்கும் மேற்பட்ட வாகனங்கள் இருந்தாலும் நிறுத்துகின்ற அளவிற்கு இருசக்கர வாகனங்களினுடைய பார்க்கிங் வசதி. அதேபோல் தடையில்லாத மின் சாரத்திற்கு அதிக கொள்ளளவு கொண்ட KV டிரான்ஸ்பார்ம். அதேபோல் மழைக்காலங்களில் மழைநீர் தேங்காமல் இருப்பதற்காக மழைநீர் வடிகால்களை அமைப்பது என்று பல்வேறு பணிகள் திட்டமிடப்பட்டு, இது ஒரு சென்னையிலேயே உலகத்தரம் வாய்ந்த ஒரு வண்ண மீன்கள் அங்காடியை உருவாக்குகின்ற நோக்கத்தோடு இன்றைய தினம் இதை பார்வையிட்டு இருக்கின்றோம்.

எங்கள் துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய திருமதிகாகர்லா உஷா அவர்களும், அதேபோல் கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறையின் செயலாளர் அன்பிற்கினிய டாக்டர் சுப்பையன் அவர்களும் அதேபோல் எங்கள் துறையினுடைய சிஇஓ சிவஞானம் அவர்களும், மின்வளத்துறை ஆணையாளர் முரளிதரன் அவர்களும், மாநகராட்சி துணை ஆணையாளர் கௌசிக் அவர்களும் இன்றைக்கு பார்வையிட்டு இருக்கின்றோம்.

அடுத்த மாதம் செப்டம்பர் இறுதிக்குள் அல்லது அக்டோபர் முதல் வாரத்தில் வண்ண மீன் உற்பத்தியாளர்களுடைய பயன்பாட்டிற்கு முதலமைச்சர் அவர்கள் தான் இந்த திட்டத்தை தங்களுடைய பொற்காலங்களால் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். அவருடைய பொற்கரங்களாலேயே இந்த கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தை திறந்து வைப்பார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது மேயர் திருமதி.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் சுப்பையன், சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையாளர் க.வீ.முரளிதரன், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர்கள் கூ.பீ.ஜெயின், பி.ஸ்ரீராமுலு, தலைமை பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் பாலமுருகன், ராஜன் பாபு, மாநகராட்சி மண்டல அலுவலர் விஜய்பாபு, மாமன்ற உறுப்பினர்கள் தாஹா நவீன், திருமதி.சுதா தீனதயாளன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

121 வது வார்டில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

பகுதிச் செயலாளர் நந்தனம் கி. மதி வேண்டுகோள்!

சென்னை, ஆக. 28 -

சென்னை 121 -வது வார்டில் இன்று பொதுமக்கள் குறை தீர்க்கும் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம் நடைபெறுகிறது. இது குறித்து பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

சென்னை ராயப்பேட்டை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஒய்.எம்.சி.ஏ. திடலில் தமிழக முதல்வரும் நம் கழகத் தலைவரின் பொற்கால ஆட்சியின் சாதனையான 'உங்களுடன்ஸ்டாலின்' முகாம் இன்று (28.8.2025) காலை 9.00 மணி முதல் நடைபெறுகிறது.

வார்டுக்குட்பட்ட வட்டச் செயலாளர்கள் டி. ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் பல்வேறு அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் - கழகத்தினர் அந்தந்தப் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து , அந்த துறை அதிகாரிகளிடம் வழங்கும் பணியினை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தர்மபுரி மாவட்டம்,முக்கல்நாயக்கன்பட்டி ஊராட்சி வடக்கத்தியான் கொட்டாய் துவக்க பள்ளி சுற்றுசுவர்,கன்னியான் கொட்டாய் சுடுகாட்டு சாலைக்கு சிறுபாலம்,செட்டிக்கரை ஆதிதிராவிடர் நலப்பள்ளிக்கு சுற்று சுவர் ஆகிய பணிகளை தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி தொடங்கிவைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பி.சக்திவேல்,பச்சியப்பன்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.சிவகுரு, ஐ.டி.விங் கௌதம்,மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் முனுசாமி,ஆர்.சரவணன், வெற்றிவேல்,மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சிக்காக அம்பத்தூர் மண்டலம் 7, கோட்டம் 89–ல் உள்ள திருவள்ளுவர் தெரு, அவ்வை நகர், பாடியில் பொது மக்களுக்கு முதல்வரின் முகவரித் துறை கோரிக்கை விண்ணப்பப் படிவங்களை சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் வழங்கி துவங்கி வைத்தார். இந்நிகழ்வில் மண்டல குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி, பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி. ராஜகோபால், மாமன்ற உறுப்பினர் எம்.இ. சேகர், வட்டம் 89 செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர்–பகுதி–20 , இளநிலை பொறியாளர் –89, சுகாதார ஆய்வாளர் – 89 ஆகியோருடன் வட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

கோயம்புத்தூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில்

மேம்பாட்டுத் தேவைகள் - ரயில்வே சேவை மேம்பாடுகள்!

தெற்கு ரயில்வே கோட்ட மேலாளரிடம் – முனைவர் கணபதி ப.ராஜ்குமார் எம்.பி. கோரிக்கை!

கோயம்புத்தூர், ஆக. 28 -

கோயம்புத்தூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மேம்பாட்டுத் தேவைகள் மற்றும் ரயில்வே சேவை மேம்பாடுகள் குறித்து தெற்கு ரயில்வே கோட்ட மேலாளரிடம் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கோரிக்கை வைத்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு: கோயம்புத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள ரயில்வே உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள் தொடர்பாக பொதுமக்களின் பல நீண்டகால கோரிக்கைகள் மற்றும் அழுத்தமான தேவைகள் குறித்து உங்கள் கவனத்தை ஈர்க்க நான் எழுதுகிறேன். வளர்ந்து வரும் மக்கள் தொகை, பொருளாதார செயல்பாடு மற்றும் பிராந்தியத்தின் இணைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்த வளர்ச்சிகள் முக்கியமானவை.

1. புதிய ரயில் சேவைக்கான கோரிக்கை : திருச்செந்தூரில் உள்ள புகழ்பெற்ற அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் செல்லும் பக்தர்கள், பொதுப் பயணிகளின் நீண்டகால பயணத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கோவையிலிருந்து மதுரை மற்றும் தூத்துக்குடி வழியாக திருச்செந்தூருக்குச் செல்கின்றனர். தொழிலதிபர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் கோரிக்கைக்கு ஏற்ப, தூத்துக்குடி துறைமுகம் மற்றும் கோவை இடையே சரக்கு போக்குவரத்து மேம்படுத்தப்பட வேண்டும் என்ற வலுவான மற்றும் நீண்டகால கோரிக்கை உள்ளது. குறிப்பாக கோயம்புத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இயங்கும் தொழில் துறை மற்றும் உற்பத்தித் துறைகளுக்கு, மூலப்பொருட்கள் மற்றும் முடிக்கப்பட்ட பொருட்களின் சரியான நேரத்தில் மற்றும் செலவு குறைந்த போக்குவரத்தை உறுதி செய்வதற்கு இந்த பாதை இன்றியமையாதது.

கோயம்புத்தூரில் இருந்து திருச்சிராப்பள்ளி வழியாக வேளாங்கண்ணிக்கு தமிழ் நாட்டின் முக்கிய கிறிஸ்தவ புனிதத் தலமான வேளாங்கண்ணியில் உள்ள நல்ல ஆரோக்கிய அன்னையின் பசிலிக்காவிற்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் பக்தர்களின் பயணத்தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக.

பெங்களூருக்கு இரவு ரயில் மென்பொருள் வல்லுநர்கள் மற்றும் வணிகர்களின் நலனுக்காக கோவையில் இருந்து பெங்களூருக்கு தினசரி இரவு ரயில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பது பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையாகும்.

2. நெரிசலைக் குறைக்கும் கோயம்புத்தூர் சந்திப்பு : கோயம்புத்தூர் சந்திப்பில் இருந்து புறப்படும் சில ரயில்களை வடக்கு கோயம்புத்தூர் நிலையத்திலிருந்து புறப்படும் வகையில் மாற்றலாம், இது கோவை சந்திப்பில் நெரிசலைக் குறைக்கும்.

3. பொள்ளாச்சிக்கு அடிக்கடி மெமு சேவைகள் : முதல் கட்டமாக கோயம்புத்தூர் மற்றும் பொள்ளாச்சி இடையே ஒரு நாளைக்கு நான்கு முறை மெமு ரயில்களை அறிமுகப்படுத்த கோரிக்கை.

4. கோயம்புத்தூர் இரயில் நிலையத்தின் மறுசீரமைப்பு : கோயம்புத்தூர் இரயில் நிலையத்திற்கு முன்மொழியப்பட்ட மறுவடிவமைப்புப் பணிகளின் தொடக்கத் தேதியை தயவு செய்து தெளிவுபடுத்தவும்.

5. வரலாற்று ரயில் சேவைகளின் மறுசீரமைப்பு: மீட்டர் கேஜ் காலத்தில் இயக்கப்பட்ட பின்வரும் ரயில்களை மீண்டும் இயக்க கோரிக்கை: ரயில் எண் 6715/6716 கோயம்புத்தூர் ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ், ரயில் எண் 719/720 கோயம்புத்தூர் தூத்துக்குடி, கோயம்புத்தூர் கொல்லம், கோவை போடிநாயக்கனூர்

6. ரயில் சேவைகள் நீட்டிப்பு: ரயில் எண் 16721/16722 மதுரை கோயம்புத்தூர் முன்பதிவு செய்யப்படாத எக்ஸ்பிரஸ் ரயில் மேட்டுப்பாளையம் வரை நீட்டிக்கப்பட வேண்டும்.

7. மெமு சேவைகள் மீண்டும் அறிமுகம்: கோயம்புத்தூர் மற்றும் சேலம் இடையே ரயில் எண் 66602/66603 மெமு பயணிகள் இயக்கத்தை மீண்டும் தொடங்க கோரிக்கை.

8. பெட்டிகளுடன் செம்மொழி எக்ஸ்பிரஸ் இயக்கம் : மன்னார்குடி கோயம்புத்தூர் செம்மொழி விரைவு வண்டியை கோயம்புத்தூரில் இருந்து மதுரைக்கு வழக்கமான எக்ஸ்பிரஸ் சேவையாக மாற்றவும்.

9. ஜன் சதாப்தி எக்ஸ்பிரஸ் நீட்டிப்பு: ரயில் எண் 12083/12084 கோயம்புத்தூர் மயிலாடுதுறை ஜன் சதாப்தி எக்ஸ்பிரஸ் சிதம்பரம் வரை நீட்டிக்க கோரிக்கை.

10. காரைக்காலுக்கு தினசரி ரயில் : பழனி, திண்டுக்கல், திருச்சி, திருவாரூர் வழியாக கோயம்புத்தூரில் இருந்து காரைக்காலுக்கு தினசரி எக்ஸ்பிரஸ் சேவையை அறிமுகப்படுத்தவும்.

11. சிறப்பு ரயிலை முறைப்படுத்துதல் : தாம்பரத்தில் இருந்து மயிலாடுதுறை திருச்சி பொள்ளாச்சி வழியாக கோவைக்கு இயக்கப்படும் சிறப்பு ரயிலை வழக்கமான தினசரி சேவையாக மாற்ற வேண்டும்.

12. இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் நீட்டிப்பு : ரயில் எண் 22609/22610 மங்களூர் கோயம்புத்தூர் இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் மேட்டுப்பாளையம் வரை நீட்டிக்கப்படலாம்.

13. வாராந்திர சேவைகளின் அதிர்வெண் அதிகரிப்பு : மேட்டுப்பாளையம் திருநெல்வேலி மற்றும் மேட்டுப்பாளையம் தூத்துக்குடி வாராந்திர ரயில்கள் தினசரி சேவைகளாக மேம்படுத்தப்படலாம்.

14. வந்தே பாரத் கூடுதல் பெட்டிகள் : அதிக பயணிகளின் தேவையை கருத்தில் கொண்டு, கோவை சென்னை வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலில் 8 கூடுதல் பெட்டிகள் சேர்க்கப்பட வேண்டும்.

இரட்டைப்பாதைப் பணி, இருகூர் முதல் போத்தனூர் வரை : இருகூர் போத்தனூர் இடையே அனுமதிக்கப்பட்ட இரட்டிப்புப் பணிக்கான நிலை மற்றும் எதிர்பார்க்கப்படும் காலக்கெடுவை தயவு செய்து வழங்கவும்.

16. வடக்கு கோயம்புத்தூர் நிலையத்தின் வளர்ச்சி : வடக்கு கோயம்புத்தூர் நிலையத்தில் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் முக்கிய ரயில்களுக்கு நிறுத்தம் சேர்க்க கோரிக்கை.

17. போத்தனூர் சந்திப்பை மேம்படுத்துதல் : தென்னக ரயில்வே பொது மேலாளரின் வருகையின் போது உறுதியளித்தபடி போதனூரில் உள்ள ரயில் பெட்டி பராமரிப்பு வசதிகளின் நிலை மற்றும் இரண்டாவது முனையமாக மாற்றப்படும். விரைந்து நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

18. தேர்ந்தெடுக்கப்பட்ட ரயில்களுக்கு போதனூரில் நிறுத்தம் : உள்ளூர் தேவையைக் கருத்தில் கொண்டு பின்வரும் ரயில்கள் போத்தனூர் சந்திப்பில் ஒரு நிமிடம் நிறுத்தப்படலாம் : ரயில் எண் 22609/22610 பெங்களூர் கோயம்புத்தூர் இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ், ரயில் எண் 12677/12678 எர்ணாகுளம் பெங்களூர் இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ், ரயில் எண் 16187/16188 எர்ணாகுளம் காரைக்கால் எக்ஸ்பிரஸ்

19. ஈச்சனாரியில் புதிய ஸ்டேஷன் : கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள், ஈச்சனாரி கோவில் உள்ளதை கருத்தில் கொண்டு, ஈச்சனாரி மேம்பாலம் அருகே புதிய ரயில் நிலையம் அமைக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

20. தரை மட்டத்தில் முன்பதிவு வசதி : கோயம்புத்தூர் ரயில் நிலையத்தில் தற்போதைய முன்பதிவு கவுன்டர்கள் முதல் தளத்தில் உள்ளது, இது மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி பயணிகளுக்கு சிரமமாக உள்ளது. மேற்குப் பகுதியில் தரைமட்ட முன்பதிவு வசதி கோரப்பட்டுள்ளது.

21. நெரிசல் மற்றும் கூடுதல் நிறுத்தங்கள் : கோயம்புத்தூர் சந்திப்பின் நெரிசலைக் குறைக்கவும், புறநகர்ப் பயணிகளுக்கு சிறந்த சேவை செய்யவும், தேர்ந்தெடுக்கப்பட்ட நீண்ட தூர ரயில்களை (சென்னை, பெங்களூர், திருச்சி நோக்கி) பீளமேடு மற்றும் இருகூர் நிலையங்களில் நிறுத்துவதற்கான சாத்தியக் கூறு ஆய்வு நடத்தப்படலாம்.

இந்த கோரிக்கைகள் கோயம்புத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பயணிகளின் அவசர தேவைகள் பிரதிபலிக்கின்றன என்று கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி வடக்கு ஒன்றியம் தாழவேடு ஊராட்சி தாழவேடு கிராமத்தைச் சேர்ந்த கழக நிர்வாகி காட்டையன் மனைவி சுமதி மறைவையொட்டி திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணிஎஸ். சந்திரன் எம்.எல்.ஏ நேரில் சென்று அவர்களின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினார். உடன்ஒன்றிய செயலாளர் ஏ.எல்.விஜயகுமார், உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பழவேற்காடு கோட்டைக்குப்பம் பகுதியை சார்ந்த ராஜி அவர்களின் மகன் திவாகர்மருத்துவ சிகிச்சைக்காக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் நிதி உதவி வழங்கினர். அருகில் கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வெ.அன்புவாணன், நிர்வாகிகள் க.சம்பத், வல்லூர் பா.து.தமிழரசன், அத்திப்பட்டு எம்.டி.ஜி.கதிர்வேல் , மீனவரணி குமார், பெரியபாளையம் கார்த்திக், உள்பட பலர் உள்ளனர்.